# தென்காசி நகராட்சி

## 31.01.2011 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

**மன்றப்பொருள்: 1**

திருமதி. எஸ். கண்ணம்மாள், இளநிலை உதவியாளர் தனக்கு பதவியில் சேர்ந்த நாளில் இருந்து பதவி உயர்வு வேண்டும் என கேட்டு தொடர்ந்த தமிழ்நாடு நிர்வாக தீர்ப்பாணையை வழக்கு மேற்படி தீர்ப்பாணையம் மூடப்பட்டதால் மேற்படி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டு WP No. 7795/07ல் பதிவாகி வழக்காடலுககு வர உள்ளது.

மேற்படி வழக்கை வழக்காடும் வழக்கறிஞர் திரு.வி. சுப்பையா அவர்களுக்கு வழக்காடல் கட்டணம் ரூ. 6,000/-வழங்கவும், மற்றும் இதர செலவினங்களுக்கும், மேற்படி வழக்கை நடத்தவும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**மன்றப்பொருள்: 2**

இயக்குநர், தமிழ்நாடு நகர்புற பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.307/10/அ3 நாள். 16.11.2010ம் நாளைய கடிதத்தில் தெரிவித்துள்ளபடி தமிழ்நாடு நகர்ப்புற பயிற்சி நிறுவனத்திற்கு 2010-11ம் ஆண்டிற்கு இந்நகராட்சியின் சார்பில் வருடாந்திர பங்குத் தொகையாக ரூ.25,000/-( ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (4106/10/சி1)

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 3</u>**

தென்காசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 30 புதுமனை 2ம் தெருவில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.5.25 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.44 நாள். 13.01.2010ல் மன்ற அனுமதி பெறப்பட்டு பணிகள் துவங்கப்படாத நிலையில் தற்போது திருத்திய மதிப்பீடாக ரூ.7.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே பழைய தீர்மானத்தினை ரத்து செய்து தற்போதைய திருத்திய மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1. திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2. பழைய தீர்மான எண்.44 நாள். 13.01.2010னை ரத்து செய்யலாம்.
3. மேற்படி பணிகள் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
4. இச்செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள்: 4**

இந்நகராட்சி பொதுநிதி 2010-11ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.288 நாள். 14.10.2010ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 22.12.2010ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.31 உச்சிமாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு மற்றும் புலிக்குட்டி விநாயகர் கோவில் தெருவில் தார்தளம் அமைத்தல் | 13.70 | 1) ஜி.சோமசுந்தரம்,<br>2)எம். கிருஷ்ணசாமி, | 0.48% கூடுதல்<br>0.04% குறைவு |

அ.கு 1 மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தொகையை விட 0.04% குறைவாக கொடுத்துள்ள எம்.கிருஷ்ணசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 5**

இந்நகராட்சி பொதுநிதி 2010-11ம் ஆண்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிக்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண். 247 , 256 நாள்.03.12.2009 மற்றும் 45 நாள். 13.01.10ம் தேதியில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.11 ல் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.40 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 0.05% குறைவு<br>0.14% கூடுதல் |
| 2 | வார்டு எண். 28, முப்புடாதியம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 2.00 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 0.02% குறைவு<br>0.52% கூடுதல் |
| 3 | அணைக்கரைத் தெருவில் சிறுபாலம் அமைத்தல் | 1.00 | 1) அருணாசலம்<br>2) ஜி. சோமசுந்தரம் | 3.35% கூடுதல்<br>0.07% குறைவு |

அ.கு 1 வரிசை எண் 1,2 மற்றும் 3க்கான பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 6</u>**

தென்காசி நகராட்சி பொதுநிதிபணி 2010-11ம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட பணிகளுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 161, 179, 181, 182 மற்றும் 184 நாள்.29.04.10ம் தேதியில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 24.12.2010 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரார் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.31 புதுமனை 1ம்தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 0.85 | 1) சோமசுந்தரம்<br>2) அருணாசலம் | 0.04% குறைவு<br><br>16.65% கூடுதல் |
| 2 | வார்டு எண்.32 உச்சிமாகாளி 2ம் தெருவில் (ஆர்.சி.பள்ளி எதிர்புறம்) சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.90 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 0.04% குறைவு<br><br>0.36% கூடுதல் |
| 3 | துப்புரவு பணியாளர் காலனி அருகிலுள்ள கழிப்பறை பராமரிப்பு பணி | 1.25 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 9.78% அதிக கூடுதல்<br><br>4.71% குறைவு |
| 4 | வார்டு எண்.33ல் குடிநீர் குழாய் பதித்தல் | 2.20 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 4.10% அதிக கூடுதல்<br><br>1.03% கூடுதல் |
| 5 | வார்டு எண்.10ல் குடிநீர் குழாய் பதித்தல் | 2.25 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 8.87% அதிக கூடுதல்<br><br>4.49% கூடுதல் |

அ.கு

1 வரிசை எண் 1 மற்றும் 2க்கான பணிக்கு மதிப்பீட்டு தொகையை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று பணிஉத்திரவு வழங்கியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

3 வரிசை எண்.3, 4 மற்றும் 5க்கான பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையைவிட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

**மன்றப்பொருள்: 7**

தென்காசி நகராட்சி 27வது வார்டு ஆசாத் நகரில் பொதுமக்கள் பயன்பாட்டில் இயங்கி வரும் வாம்பே பொதுக்கழிப்பிடத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் கல், மண் மூடி உள்ளதால் மேற்படி கழிப்பிடம் இயங்கவில்லை. அதனால் நகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் அருகில் உள்ள கிணற்றில் புதிதாக 2 ஹெச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார், பைப் பொருட்கள் மாட்டி கழிப்பிடத்தினை இயக்குவதற்கு உத்தேச செலவு தொகை ரூ.20,000/- **(இருபதாயிரம் மட்டும்) மன்றம் அனுமதிக்க வேண்டப்படுகிறது.**

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.
**2** மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 8**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.1 ஜமாலியா நகரில் தார்சாலை அமைக்க ரூ.3.10 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு மன்ற.அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.
**2** மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 9**

தென்காசி நகராட்சிக்குட்பட்ட சம்பா தெருவில் அமைந்துள்ள துப்புரவு பிரிவு அலுவலகம் 2ன் அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்படி கட்டிடத்தில் அலுவலகம் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி பழுதடைந்துள்ள கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி புதிய அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு ரூ.9.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
**2** மேற்படி செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 10</u>**

இந்நகராட்சி துப்புரவு பணியாளர்களுக்கு 2010-11ம் ஆண்டிற்கான சீருடை தைப்பதற்கு தையற்கூலிக்கான உத்தேச செலவு தொகை ரூ.45,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | துப்புரவு பணியாளர் நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்படி துப்புரவு பணியாளர்களுக்கு தொகை வழங்கியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம். |

**<u>மன்றப்பொருள்: 11</u>**

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2010-11ம் ஆண்டு சுவர்ணஜெயந்தி திட்டத்தின் கீழ் தனிநபர் கணக்கு (USEP) வரப்பட்டுள்ள மானியத்தொகை ரூ.2,29,327/-ஐ 58 பயனாளிகளுக்கு வங்கி கடன் வழங்க சமுதாய மேம்பாட்டுச் சங்கம் I மற்றும் IIன் கூட்டம் 03.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.2லும் மேலும் வறுமை ஒழிப்புக் குழு 06.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.2லும் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி தீர்மானத்தை நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | அவசரம் கருதி விண்ணப்பம், மான்யத் தொகை வங்கிகளுக்கு அனுப்பியதை மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 12</u>**

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2010-11ம் ஆண்டு சுவர்ணஜெயந்தி திட்டத்தின் கீழ் குழுக்களுக்கு (UWSP) வரப்பட்டுள்ள மானியத்தொகை ரூ.1,71,995/-ஐ மூப்பின் அடிப்படையில் மானியத்துடன் கூடிய வங்கி கடன் வழங்க சமுதாய மேம்பாட்டுச் சங்கம் I மற்றும் IIன் கூட்டம் 03.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.3லும் மேலும் வறுமை ஒழிப்புக் குழு 06.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.3லும் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி தீர்மானத்தை நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2 | அவசரம் கருதி விண்ணப்பம், மான்யத் தொகை வங்கிகளுக்கு அனுப்பியதை மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 13</u>**

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2010-11ம் ஆண்டு சுவர்ணஜெயந்தி திட்டத்தின் கீழ் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்தின் கீழ் (TCS) வரப்பட்டுள்ள மானியத்தொகை ரூ.57,332/-ஐ மூப்பின் அடிப்படையில் கூட்டுறவு சிக்கன நாணய சங்கத்திற்கு சுழல் நிதி வழங்க சமுதாய மேம்பாட்டுச் சங்கம் I மற்றும் IIன் கூட்டம் 03.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.4லும் மேலும் வறுமை ஒழிப்புக் குழு 06.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.4லும் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி தீர்மானத்தை நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 14</u>**

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 2010-11ம் ஆண்டு சுவர்ணஜெயந்தி திட்டத்தின் கீழ் சமுதாய கட்டமைப்பு (UCDN) திட்டத்தின் கீழ் வரப்பட்டுள்ள மானியத்தொகை ரூ.1,14,603/-ஐ பிளாஸ்டிக் விழிப்புணர்வு முகாம், ஆர்.சி.வி.எஸ், கன்வீனர் விழிப்புணர்வு குழு கூட்டம் மற்றும் குழுக்களுக்கு பேரேடுகள் வழங்குவதற்கு சமுதாய மேம்பாட்டுச் சங்கம் I மற்றும் IIன் கூட்டம் 03.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.6லும் மேலும் வறுமை ஒழிப்புக் குழு 06.08.2010ம் தேதிய தீர்மானம் எண்.6லும் நிறைவேற்றி உள்ளது.

மேற்படி தீர்மானத்தை நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 15</u>**

வார்டு எண்.28 முப்புடாதி அம்மன் கோவில் தெருவில் உள்ள சிமெண்ட் தளம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அதனை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.0.94 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 16**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.13 மரைக்காயர் பள்ளிவாசல் தெருவிலுள்ள தொழுகை பள்ளி அருகில் தெருவிளக்கு இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் இருள் சூழ்ந்துள்ளது. இதனால் அதிகாலை மற்றும் இரவு நேரங்களில் தொழுகைக்கு செல்லும் வயதானவர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் நடந்து செல்ல மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதியில் புதிய 2 மின்கம்பங்கள் அமைத்து 40 வாட் குழல் விளக்குகள் உத்தேச மதிப்பீடு ரூ.40,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதி வழங்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 17**

தென்காசி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3ல் உடையார் தெருவில் கட்டப்பட்டுள்ள சமுதாய நலக்கூடத்தில் சுற்றுசுவர் கட்டும் பணிக்கு ரூ.4.00 லட்சம் (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு 1 மதிப்பீட்டு தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.
2 இச்செலவினத்தை நகராட்சிப் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 18**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகனம் TN 72 X 4369 மினிலாரியில் வீல் பேரிங், இன்னர் பேரிங், பிரேக் சிலிண்டர், கியர் பாக்ஸில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ.7,000/- (ரூபாய் ஏழாயிரம் மட்டும்) க்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 19</u>**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களுக்கு 2010-11ம் ஆண்டிற்கு காலணிகள் வாங்கி வழங்குவதற்கு ஆகும் உத்தேச செலவீனம் ரூ.20,000/- செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 அரசாணை எண். எம்.எஸ்.283/18.06.1998ல் தெரிவித்துள்ளபடி அரசு நிறுவனமான கதர் நிறுவனத்திடம் வாங்குவதற்கு அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 20</u>**

பொதுநிதி 2010-11ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.20 நாள். 25.02.10 மற்றும் நகர்மன்றத் தீர்மானம் எண்.328 நாள்.30.12.10 ஆகிய தேதிகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 22.12.10ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.30 கீழப்பேட்டை தெருவில் தார்தளம் அமைத்தல் | 5.75 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம்<br>3) பாலசுப்பிரமணியன் | 4.53% கூடுதல்<br>9.15% அதிக கூடுதல்<br>0.88% குறைவு |
| 2 | வார்டு எண்.8 மலையான் தெரு (துங்கம்மன்கோவில்) சிமெண்ட் தளம் அமைத்தல் | 5.80 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 4.99% கூடுதல்<br>5.29% அதிக கூடுதல் |
| 3 | வார்டு எண்.13 ஐவராஜா கோவில் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 2.30 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 4.99% கூடுதல்<br>5.87% அதிக கூடுதல் |
| 4 | வார்டு எண்.6 எல்.ஆர்.எஸ். பாளையம் தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 3.00 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 4.99% கூடுதல்<br>5.87% அதிக கூடுதல் |

அ.கு 1 வரிசை எண் 1 க்கான பணிக்கு மதிப்பீட்டை விட 0.08% குறைவாக கொடுத்துள்ள எஸ்.பாலசுப்பிரமணியன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 வரிசை எண்.1,2,3 மற்றும் 4க்கான பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

**<u>மன்றப்பொருள்: 21</u>**

இந்நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2010-11ம் ஆண்டு திரு.வீ.கருப்பசாமி பாண்டியன் , தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ்க்கண்ட பணிகளுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவ. மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ8/1277/10 நாள்.11.06.2010ம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 28.12.10ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 21 தெப்பக்குளம் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 0.40 | 1) பாலசுப்பிரமணியன்<br>2) அருணாசலம் | 0.04% குறைவு<br>2.27% கூடுதல் |
| 2 | வார்டு எண்.24 பெரிய தெருவில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1.00 | 1) பாலசுப்பிரமணியன்<br>2) அருணாசலம் | 3.24% கூடுதல்<br>7.33% அதிக கூடுதல் |
| 3 | வார்டு எண். 21 அம்மன் சன்னதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 0.40 | 1) பாலசுப்பிரமணியன்<br>2) அருணாசலம் | 0.04% குறைவு<br>2.27% கூடுதல் |
| 4 | வார்டு எண்.9 வடக்கு மவுண்ட் ரோட்டில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 1.78 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 0.47% கூடுதல்<br>4.13% அதிக கூடுதல் |
| 5 | வார்டு எண்.7 மலையான் தெருவி (சுப்பிரமணியசுவாமி கோவில்) ஆழ்துளை கிணறு அமைத்தல் | 1.00 | 1) அருணாசலம்<br>2) பாலசுப்பிரமணியன் | 1.93% கூடுதல்<br>3.49% அதிக கூடுதல் |

அ.கு

1 வரிசை எண் 1 மற்றும் 3க்கான பணிக்கு மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 வரிசை எண் 2,4 மற்றும் 5க்கான பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

3 திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்படி பணிகளுக்கு பணிஉத்திரவு வழங்கியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 22**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.25 உமரே பாரூக் தெருவிலுள்ள தார்தளம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அப்பகுதி மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். மேலும் அந்த வார்டு உறுப்பினர்களின் வேண்டுகோளின்படியும் , நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி சாலையை அமை.க்க உத்தேச மதிப்பீடு ரூ.5.20 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 23**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட கீழரதவீதி காசிவிஸ்வநாதர் கோவில் முன்புள்ள 16 மீட்டர் உயரம் கொண்ட உயர் கோபுர மின் விளக்கின் பழுதினை சரி செய்ய இந்நகர்மன்றத் தலைவர் அவர்களால் 19.08.2010ம் தேதி முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 08.09.2010ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | ஜெய்கிஷோர் ஏஜென்ஸிஸ், 52, கீழரதவீதி, திருநெல்வேலி | 102360 |
| 2 | ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஜெயின் 113, கீழரதவீதி , திருநெல்வேலி | 89557 |

அ.கு 1 மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம். (2525/10/இ1)

**<u>மன்றப்பொருள் 24</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 76 7993 ஈப்பு வாகனத்தின் பழுதினை சரி செய்ய உத்தேச செலவினம் 3,000/-க்கும் மேற்படி வாகனத்தின் அவசர அவசியம் கருதி 30.12.2010ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மூஸா இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,<br>194, செங்கோட்டை ரோடு, தென்காசி. | 2940 |
| 2 | எஸ்.நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ்,<br>1ஏ, பஸ்டாண்டு ரோடு, தென்காசி | 3620 |
| 3 | நேஷனல் மோட்டார் ஒர்க்ஸ்,<br>58எப், செங்கோட்டை ரோடு , தென்காசி | 3790 |

அ.கு 1 மேற்கண்ட பணிக்கான உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/-ஐ மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் கண்ட குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

3 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (3731/10/இ1)

**<u>மன்றப்பொருள்: 25</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 72 Y 4567 ஈப்பு வாகனத்திற்கு பேட்டரி வாங்கப்பட்டு சுமார் 20 மாதங்களுக்கு மேலாகி விட்டபடியால் மேற்படி பேட்டரியின் திறன் குறைந்து மேற்படி வாகனத்தை இயக்க இயலவில்லை. எனவே புதிய பேட்டரி வாங்கி பொருத்த உத்சேே செலவு ரூ.6,000/- க்கும் மேலும் அவசர அவசியம் கருதி 28.01.2011ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | சரவணா பேட்டரி ஒர்க்ஸ, 69/3இ, பெருமாள் கோவில் தெரு, | 5450 |
| 2 | இம்பீரியல் பேட்டரி சர்வீஸ், 1பி, மேலமாசி வீதி, தென்காசி | 5650 |
| 3 | லோகநாயகி பேட்டரீஸ், 29/5 மேலமாசி வீதி, தென்காசி | 5650 |

அ.கு 1 மேற்படி பணிக்கான உத்தேச செலவுத் தொகை 6,000/-ஐ மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 மேற்படி பணிக்கு வரிசை எண்.1ல் கண்ட குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

3 மேற்படி செலவினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 26</u>**

தென்காசி நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு, மன்னார் கோவில், திருமலையப்பபுரம், ஆசிர்வாதபுரம் மற்றும் தென்காசி வாய்க்கால்பாலம் ஆகிய 5 இடங்களில் உள்ள நீருந்து நிலையங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 5 இடங்களில் உள்ள மின்மோட்டார்களை இயக்கவும், பராமரிக்கவும் இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வரப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 31.03.2011ம் ஆண்டுடன் முடிவடைவதால் மேலும் 01.04.2011 முதல் 31.03.2012 முடிய ஓராண்டு காலத்திற்கு மேற்படி குடிநீர்திட்ட பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும், தலைமை நீரேற்று நிலையம் அமைந்துள்ள ஊர்க்காட்டிலிருந்து தென்காசி வரையிலான 40.20 கி.மீ நீளத்தில் பதிக்கப்பட்டுள்ள பிரதான குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் கசிவுகளை சரிசெய்யும் பணிக்காகவும் உத்தேச மதிப்பீடு 9.50 லட்சத்திற்கு தயாரி.க்ப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு **1** மன்றம் அனுமதிக்கலாம்.
**2** மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**<u>மன்றப்பொருள்: 27</u>**

தென்காசி நகராட்சி மதுரை ரோட்டில் மேம்பாலம் கட்டும் பணி நடைபெறுவதால் இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் குழாயினை மாற்றி அமைக்க திருநெல்வேலி கோட்டப் பொறியாளர் , நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கடிதம் எண்.எல்.சி502/09/Do நாள். **25.01.2010**ன்படி மதிப்பீடு ரூ.**36.00** லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளரின் ஆணை எண். **955/06**/ஆ**1** நாள். **22.02.2010**ன்படி தொழில் நுட்ப அங்கீகாரம் பெறப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண். **48** நாள். **25.02.2010**ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண். **128** நாள். **31.03.2010**ன்படி திரு.எஸ். பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் போது குழாய் பதிக்கும் பாதையில் பாறைகள் அதனை அகற்றும் பொருட்டு செலவு தொகை கூடுதல் ஆனதால் ஏற்பட்ட கூடுதல் செலவு தொகை ரூ. **67985**/- ஆகிறது. எனவே கூடுதல் தொகையினை சேர்த்து திருத்திய மதிப்பீடு தொகை ரூ.**36,67,985**/-க்கு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

.

அ.கு **1** திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
**2** மேற்படி கூடுதல் செலவு தொகை ரூ.67,985/-ஐ நெடுஞ்சாலைத்துறையினரிடமிருந்து பெறலாம்.

**<u>மன்றப்பொருள்: 28</u>**

தென்காசி நகராட்சி எல்கைக்குட்பட்ட 33வது வார்டுகளில் 275 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு அடிபம்புகள் மூலம் குடிநீர் அல்லாத பிற உபயோகங்களுக்காக பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது. மேற்படி அடிபம்புகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நிவர்த்தி செய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் மேற்படி அடிபம்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இவ்ஒப்பந்தக்காலம் 31.03.2011ல் முடிவடைவதால் மேலும் 01.04.2011 முதல் 31.03.2012ல் வரையிலான ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.35 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 29</u>**

தென்காசி நகராட்சிப் பகுதியில் 62 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இதற்கான மதிப்பீட்டு தொகை 31.03.2011ல் முடிவடைவதால் மேலும் 01.04.2011 முதல் 31.03.2012ல் வரையிலான ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 30</u>**

தென்காசி நகராட்சிப் பகுதியில் உள்ள 33 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகமானது 21 Zone பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பல அளவு விட்டமுள்ள குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேற்படி குடிநீர் பகிர்மானக் குழாய்களில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வால்வுகளை இயக்கி 21 (Zone) பிரிவுகளுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்ய போதுமான வால்வு திருப்புனர்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தால் மேற்படி வால்வுகளை இயக்கி பராமரிக்கும் பணியானது 4 பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் செய்யப்படுகிறது. . இதற்கான மதிப்பீட்டு தொகை 31.03.2011ல் முடிவடைவதால் மேலும் 01.04.2011 முதல் 31.03.2012ல் வரையிலான ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.62 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 உத்தேச மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 31</u>**

தென்காசி எல்கைக்குட்பட்ட பகுதியிலுள்ள வார்டு எண்.1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு கிழக்கு குறுக்கு தார்சாலை மிகவும் மோசமாக உள்ளதால் அப்பகுதி மக்களுக்கு போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. மேற்படி சாலையினை சீரமைக்க அந்த வார்டு நகர்மன்ற உறுப்பினரின் வேண்டுகோளின்படியும் , நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்படி தார் சாலையினை அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.17.20 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 32</u>**

தென்காசி எல்கைக்குட்பட்ட பகுதியிலுள்ள வார்டு எண்.31 புலிக்குட்டி விநாயகர் கோவில் தெரு (அக்கிரகாரம்) விலுள்ள தார்சாலை மற்றும் சிவன் கோவில் அருகில் உள்ள தார்சாலை மிகவும் மோசமடைந்துள்ளதால் அதனை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ9.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 33</u>**

தென்காசி எல்கைக்குட்பட்ட பகுதியிலுள்ள வார்டு எண்.31 உச்சிமாகாளி அம்மன் கோவில் 1ம் தெரு (சலவை தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி) விலுள்ள சிமெண்ட் தளம் , சாஸ்தா கோவில் அருகில் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 34</u>**

தென்காசி எல்கைக்குட்பட்ட பகுதியிலுள்ள வார்டு எண்.1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பிலிருந்து காளிதாசன் நகர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளுக்கு குடிநீர் பிரதான குழாய் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.8.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 35</u>**

தென்காசி நகராட்சி வார்டு எண்.20 சிந்தாமணியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2009-10ன் கீழ் 3.60 லட்சம் மதிப்பீட்டில் நவீன கழிப்பிடம் கட்டும் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. கழிப்பிடம் கட்டும் பணிக்கு 10.11.2009ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் என்பவருக்கு மதிப்பீடு தொகைக்கு 4.03 சதவீதம் அதிகம் என்ற விகித அடிப்படையில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.237 நாள். 03.12.2009ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டது. பணியினை ஒப்பந்தக்காரர் மேற்கொள்ளும் போது அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர் ஆகியோர் இப்பகுதியில் உள்ள கூடுதலான மக்கள் தொகையினை கணக்கில் கொண்டும் அருகில் வேறு பொதுக் கழிப்பிட வசதி ஏதும் இல்லை என்பதை கருத்தில் கொண்டும் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியாக கூடுதல் அறைகள் கொண்ட பொதுக்கழிப்பிடம் கட்டித் தரவேண்டும் என கோரியதின் அடிப்படையில் கூடுதல் அறைகள் கொண்ட கழிப்பிடம் அமைக்க திருத்திய மதிப்பீடு ரூ.5.25 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | திருத்திய மதிப்பீடு ரூ.5.25 லட்சத்திற்கு அனுமதி வழங்கலாம். மேலும் மேற்படி பணிக்கான கூடுதல் மதிப்பீட்டுத் தொகை ரூ.1.65 லட்சத்தினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 36</u>**

தென்காசி நகராட்சியில் பொதுநிதியின் கீழ் வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியில் சின்டெக்ஸ் டேங்க் அமைத்து நீர் விநியோகம் செய்ய ரூ.1.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.271 நாள். 03.12.2007ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தக்காரர் எஸ். பாலசுப்பிரமணியன் என்பவருக்கு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண். 44 நாள். 12.05.2008ல் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் 26.05.2008ல் பணி உத்திரவு வழஙகப்பட்டது. பணி மேற்கொள்ளும் போது பணியின் அவசியம் கருதியும் இப்பகுதி மேடான இடமாக இருப்பதால் குடிநீர் அல்லாத உபயோகங்களுக்காக நீரின் தேவை அதிகமாக இருந்ததினால் கூடுதல் தெருக்களுக்கும் குழாய் பதிக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டுகோளுக்கிணங்க கூடுதலான அளவில் குழாய் பதிக்கப்பட்டது. இதனால் மதிப்பீட்டுத் தொகை ரூ.9200 கூடுதல் ஆகிறது. எனவே இப்பணிக்கான திருத்திய மதிப்பீடு ரூ.1,09,200/- க்கு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அ.கு | 1 | திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2 | மேற்படி கூடுதல் செலவு தொகை ரூ.9,200/-ஐ நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

**<u>மன்றப்பொருள்: 37</u>**

தென்காசி நகராட்சி வார்டு எண்.1 இரயில் நகரில் பகுதி 2 திட்டம் 2009-10ன் கீழ் ரயில் நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி ரூ.13.25 இலட்சம் மதிப்பீட்டில் 21.12.09ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மன்ற தீர்மானம் எண். 28 நாள். 13.01.2010ன்படி திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் போது சாலையின் தன்மைக்கு ஏற்பவும் இணைப்பு சாலையின் (Bell mouth) பக்கங்களில் கூடுதல் அளவு மேற்கொண்டதால மேற்படி பணியின் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ரூ.14,963/- ஆகிறது. எனவே மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.13,39,963/- க்கு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி கூடுதல் செலவு தொகை ரூ.14,963/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 38</u>**

தென்காசி நகராட்சி வார்டு எண்.1 சக்தி நகரில் பகுதி 2 திட்டம் 2009-10ன் கீழ் ரூ.5.60 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்ற தீர்மானம் எண். 196 நாள். 29.10.2009ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண். 259 நாள். 03.12.2009ன்படி திரு.எஸ்.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. பணி மேற்கொள்ளும் போது பணியின் அவசியம் கருதி சாலையின் பக்கங்கள் சந்திக்கும் இடத்தில் (Bell mouth) பக்கங்களில் கூடுதல் அளவு மேற்கொண்டதால மேற்படி பணியின் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக ரூ.8,936/- ஆகிறது. எனவே மேற்படி பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.5,69,000/- க்கு தயார் செய்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

.

அ.கு 1 திருத்திய மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி கூடுதல் செலவு தொகை ரூ.8,936/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றப்பொருள்: 39</u>**

சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் தார்தளம் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.6.00 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்
2 மேற்படி செலவினை நகராட்சி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்: 40**

இந்நகராட்சிக்கு வடகிழக்கு பருவமழை 2010-11ம் ஆண்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். இ2/81209/10 நாள். 17.12.2010ம் தேதியில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 30.12.2010ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர் பெயர் | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 21 புதுத் தெருவில் தார்தளம் அமைத்தல் | 1.15 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 0.02% குறைவு<br>5.90% கூடுதல் |
| 2 | வார்டு எண். 21 அபிஷேகபுரம் தெருவில் தார்தளம் அமைத்தல் | 2.80 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 0.02% குறைவு<br>3.11% கூடுதல் |
| 3 | வார்டு எண். 21 அனுமந்தபுரம் தெருவில் தார்தளம் அமைத்தல் | 0.35 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 0.02% குறைவு<br>3.11% கூடுதல் |
| 4 | வார்டு எண். 21 பரதன் தியேட்டர் அருகில் தார்தளம் அமைத்தல் | 0.70 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 016% குறைவு<br>8.55% கூடுதல் |
| 5 | வார்டு எண். 4 பத்மம் தியேட்டர் அருகில் தார்தளம் அமைத்தல் | 1.00 | 1)பி.ஏ.முகம்மது நிஜாம்<br>2) அருணாசலம் | 0.02% குறைவு<br>8.76% கூடுதல் |

அ.கு

1 மேற்கண்ட பணிக்கு வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள பணிக்கு மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள திரு.பி.ஏ. முகம்மது நிஜாம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**மன்றப்பொருள்: 41**

தென்காசி நகராட்சி பகுதிக்கு தென்காசி-குற்றாலம் கூட்டு குடிநீர் திட்டம் தாமிரபரணி குடிநீர் திட்டம் ஆகிய இரண்டு குடிநீர் திட்டங்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திட்டங்களின் மூலம் வழங்கப்படும் குடிநீரை நகர் பகுதிகளில் தடையின்றி தினசரி சீராக அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்படவேண்டிய அளவிற்கு தேவையான கீழ்க்கண்ட பணிகள் ரூ.1340.00 லட்சம் உத்தேச மதிப்பில் செய்ய ஏற்கனவே சென்னை நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | தென்காசி–குற்றாலம் கூட்டு குடிநீர் திட்ட கோடைகால நீர்தேக்கமான குடியிருப்பு நீர்தேக்க குளத்தில் துார்வாரும் பணி | 20.00 லட்சம் |
| 2 | தென்காசி நகராட்சி தாமிரபரணி நதி குடிநீர் திட்டத்தில் மன்னார்கோவில் நீருந்து நிலையத்திருந்து தென்காசி நீருந்து நிலையம் வரையிலான 28.40 கீமீ நீளத்திற்கு ஏற்கனவே உள்ள Psc&Ac குழாய்களை மாற்றி DI (ductile Iron pipe) குழாய்களாக மாற்றம் செய்யும் பணி | 1151.00 லட்சம் |
| 3 | இந்நகராட்சி தாமிரபரணி குடிநீர் திட்ட தலைமையிடமான ஊர்காடு நீரேற்று நிலையத்தில் தனி உயர்அழுத்த மின்பாதை அமைத்தல் (Separate feeder main) அமைத்தல் | 23.00 லட்சம் |
| 4 | இந்நகராட்சிப்பகுதியில் உள்ள மலையான் தெரு மற்றும் ஆபாத்பள்ளிவாசல் தெரு ஆகிய இடங்களில் முறையே 6.00 லட்சம் 5.00 லட்சம் கொள்ளவு கொண்ட இரண்டுட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் அமைத்தல் | 85.00 லட்சம் |
| 5 | இந்நகராட்சி விரிவாக்கப்பகுதிகளில் சுமார் 5 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணி | 51.00 லட்சம் |
| 6 | இந்நகராட்சிப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 2340 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளில் நீர்போக்கு அடைப்பான் (Flow control Valve) அமைக்கும் பணி | 10.00 லட்சம் |
| | மொத்தம் | 1340.00 லட்சம் |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 55876/2010/குவ-1 நாள். 27.01.2011ல் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட பணிகளில் வரிசை எண்.1,2, மற்றும் 3 ல் கண்ட பணிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்யவும், வரிசை எண். 4,5 மற்றும் 6 ல் கண்ட பணிகளுக்கு இந்நகராட்சி மூலம் ஆய்வு செய்து திட்ட அறிக்கை தயார் செய்ய போதுமான பணியாளர்கள் மற்றும் தளவாடஉபகரணங்கள் இல்லாத காரணத்தால் திருநெல்வேலி மண்டல அளவில் அல்லது மாவட்ட அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரி கலந்தாலோசகர் (Consultancy) மூலம் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் அதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அகு. பொருளில் கண்ட பணிகளில் வரிசை எண். 1,2 மற்றும் 3ல் கண்ட பணிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் மூலம் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கையினை தயார் செய்யவும், வரிசை எண். 4,5 மற்றும் 6 ல் கண்ட பணிகளுக்கு திருநெல்வேலி மண்டல அளவில் அல்லது மாவட்ட அளவில் ஒப்பந்தபுள்ளிகோரி கலந்தாலோசகர் மூலம் ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் இதற்கான செலவினத்தை அரசின் முழுமான்யமாகபெற்றோ அல்லது ஏதாவது ஒரு நிதி நிறுவனத்தில் கடனாக பெற்றோ மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

**<u>மன்றப்பொருள்: 42</u>**

**<u>நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.எம். நாகூர்மீரான் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்</u>**

தென்காசி நகராட்சி வார்டு எண்.19 சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் 1 முதல் 7 வரையுள்ள தெருக்களில் போதுமான அடிப்படை வசதி இல்லாத காரணத்தினால் மேற்படி தெருக்களுக்கு சாலைவசதி , இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமாறு மேற்படி நகர்மன்ற உறுப்பினர் திரு.என்.எம்.நாகூர்மீரான் 28.01.2011ம் தேதிய கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அ.கு: தென்காசி நகராட்சி எல்லையினுள் வார்டு எண். 19 ல் உள்ள சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் கதவு எண்.152ல் குடியிருந்து வரும் முகம்மது மைதீன் குமாரர் என்.எம். திவான்ஒலி என்பவர் மாவட்ட உயர்நீதிமன்ற பெஞ்ச் கிளையில் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி அவர்களை முதலாம் பிரதிவாதியாகவும் , தென்காசி நகராட்சி ஆணையாளரை இரண்டாம் பிரதிவாதியாக சேர்த்து WP No.8115/10ன்படி வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கில் அனுமதி இல்லாத மனைப்பிரிவான சொர்ணபுரம் மேட்டுத் தெருவில் 1 முதல் 7 முடிய உள்ள தெருக்களில் போதுமான அடிப்படை வசதி செய்துதரக் கோரி வழக்கு தொடர்ந்தார். மேற்படி வழக்கில் உயர்நீதிமன்றம் 20.10.2010ம் தேதி வழஙகிய உத்திரவில் தாவா இடம் தொடர்பாக சிவில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலைமையில் எந்த பொது நலனும் உள்ளடக்கம் இல்லாத நிலையில் முதல் மற்றும் இரண்டாம் பிரதிவாதிக்கு இந்த ரிட் மனுவில் உத்திரவு வழங்குவது பொருத்தமில்லை என்றும் மனுதாரர்கள் வழக்கு இல்லாத இடங்களில் தங்களுடைய தேவைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு வழங்கும்படியும் தெரிவித்து அனுகும்படி தெரிவிக்கப்பட்ட WP No.8115/10 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

இந்நிலையில் திரு.என்.எம்.திவான்ஒலி என்பவர் அனுமதி இல்லாத மனைப்பிரிவில் உள்ள 1 முதல் 7 முடிய உள்ள தெருக்களை சீர் செய்து செப்பனிட்டு மெட்டல் அல்லது தார்சாலை போட்டு சாக்கடை , குடிநீர்வசதி, போதுமான மின்விளக்கு வசதி செய்து தர கோரிய மாவட்ட ஆட்சியர் , திருநெல்வேலி அவர்களுக்கு 06.12.2010ம் தேதி மக்கள் குறைதீர்க்கும் மனு நாள் கூட்டத்தில் வழஙகிய மனுவிற்கு வரிசை எண்.1 மற்றும் 2 தெருக்களை அரசாணை எண்.11 நாள் 19.01.2006 , அரசாணை எண். 59 நாள். 25.07.2006, அரசாாணை எண். 56 நாள். 30.04.2007 மற்றும் அரசாணை எண். 244 நாள். 05.12.2008 ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி முறைப்படுத்தப்பட்டது என்றும் இனிவரும் காலங்களில் மேற்படி தெரு 1 மற்றும் 2 தெருக்களுக்கு அரசு நிதி பெற்றும் மற்றும் நகராட்சியில் போதுமான நிதிநிலையினை கருத்தில் கொண்டும் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் 3 முதல் 7 முடிய உள்ள தெருக்கள் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ளதாலும் மேலும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாலும் மேற்படி தெருக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய இயலாது என்ற விபரம் இவ்வலுவலக 28.12.2010ம் தேதி கடித ந.க.எண்.13859/10ம் தேதி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கக் கூடாது என விதிமுறைகளும் , தெளிவுரைகளும், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் அரசு சிறப்பு சாலை திட்டம் பிரேரணை தயார் செய்ய வழங்கிய பல அறிவுரைகள் மற்றும் வழிகாட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 19வது வார்டு மக்களுக்கு மேற்படி விதிமுறைகளை தென்காசி கோட்டாட்சியர் முன்னிலையில் 20.01.2011ம் தேதியன்று நடத்தப்பட்ட சமாதான கூட்டத்தில் தெளிவாக தெரிவிக்கப்பட்டும் இந்நகராட்சியின் கருத்தினை ஏற்காமல் மேற்படி பகுதி மக்கள் தொடர்ந்து மனுக்களும் வழக்குகள் தொடர்ந்தும், மக்களை திரட்டி போராட்டம் செய்து வருவதால் முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவு தெரு எண்.2ல் 1 மனையும், தெருக்கள் 3ல் 1 மனையும் வருவாய் துறை மூலம் நில ஆர்ஜிதம் செய்து முறையான ரோடு மற்றும் பிற வசதிகள் செய்து கொடுக்க கோர அரசு மற்றும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுப்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

## தென்காசி நகராட்சி

## 31.01.2011 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

| மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|
| 1 | 1 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | அ.கு அனுமதிக்கப்பட்டது வரிசை எண். 3,4 மற்றும் 5க்கான பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |
| 7 | 7 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 11 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 14 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 18 | 18 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 19 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 20 | அ.கு அனுமதிக்கப்பட்டது வரிசை எண். 2,3 மற்றும் 4க்கான பணிகளுக்கு மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்றுக் கொள்ள மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. |
| 21 | 21 | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 22 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 23 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 24 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 25 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 26 | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 27 | அனுமதிக்கப்பட்டது |
| 28 | 28 | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 29 | அனுமதிக்கப்பட்டது |
| 30 | 30 | அனுமதிக்கப்பட்டது |
| 31 | 31 | அனுமதிக்கப்பட்டது |
| 32 | 32 | அனுமதிக்கப்பட்டது |
| 33 | 33 | அனுமதிக்கப்பட்டது |
| 34 | 34 | காளிதாசன் நகர் மேடான பகுதியாக இருப்பதாலும் இந்நகராட்சியில் குடிநீர் ஆதாரம் போதுமான அளவில் இல்லாததாலும் புதியதாக குடிநீர் குழாய் பதித்து அப்பகுதிக்கு குடிநீர் சப்ளை செய்ய இயலாத நிலை உள்ளது. ஏனவே புதிய குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் ஆதாரம் செய்து பின்னர் மன்றத்தில் பொருள் வைத்து மேற்படி பணியினை செய்ய மன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது. |
| 35 | 35 | அனுமதிக்கப்பட்டது |
| 36 | 36 | அனுமதிக்கப்பட்டது |
| 37 | 37 | அனுமதிக்கப்பட்டது |
| 38 | 38 | அனுமதிக்கப்பட்டது |
| 39 | 39 | அனுமதிக்கப்பட்டது |
| 40 | 40 | அனுமதிக்கப்பட்டது |
| 41 | 41 | அனுமதிக்கப்பட்டது |
| 42 | 42 | அனுமதிக்கப்பட்டது |

தலைவர்,

தென்காசி நகர்மன்றம்.